152

பாரசீகக் கவிஞர்

உமர்கயாம்

பாடல்கள்

152

1803

3-MAY 1945
MADRAS

தமிழாக்கம்:

பாலபாரதி

ச. து. சுப்பிரமணிய யோகியார்

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை, திருச்சினுப்பள்ளி (H. O)

★

திட்டிக் கதவு தெரிந்ததடா
திறவு கோலும் இல்லையடா

கட்டித் திரையும் கண்டதடா
கண்ணும் மயங்கி நின்றதடா

ஒட்டிச் சிறிது நீநானெனன்
றுரைத்த உரையும் கேட்டதடா

நட்ட காலம் பின்னையடா
நான்நீ யற்றுப் போச்சுதடா"

(உமர் கயாம் — தேவி)

★

விலை ரூ. 1—0—0

STAR PUBLICATIONS
Palakarai :: Trichinopoly (H O)

NO. 16 (B) POEMS ON LIFE AND FATE

SECOND EDITION

April - 1945

(COPYRIGHT)

STAR PUBLICATIONS

PALAKARAI TRICHINOPOLY (H. O)

PRINTED AT THE KUMARAN POWER PRESS-KARAIKUDI

3-MAY 1945
MADRAS
1803

பாரசீகக் கவிஞர்

உமர்கயாம்

பாடல்கள்.

894.8111

031,1

தங்கமயக் கீழ்த் திசையின்
தண் கவிதை நல்லொளியாம்
பொங்கு சுடர்ப் பரிதி யொக்கும்
புததுலகம் படைத்தது யார்?
உங்கள் உமார்* எனும் பெரிய
உலகாயதன் படைத்தான்.

டெனிஸன்

* உமர்கயாம்

1803

முன்னுரை

1

உமர்கயாம் பாரசீகக் கவி: நைஸாப்பூர் என்ற ஊரில் பதினோராம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியவர்; கி.பி. 1123ல் அவர் மறைந்ததாகச் சொல்லப்படுகிறது.

உமர்கயாம் வானசாஸ்திரத்தில் மகா நிபுணர்; குரானிலும் மதநூல்களிலும் நன்கு பயின்றவர். பாரசீக மொழியில் பஞ்சாங்கம் கணிக்க நியமிக்கப்பட்ட சபையில், உமரும் உயர்ந்த ஸ்தானம் பெற்றிருந்தார். வான சாஸ்திரக் கணக்குகளை நிர்ணயிக்கும் புத்தகம் ஒன்றையும், அவர் நிரம்பிய புலமையுடன் உறுதியாக இயற்றினார்.

2

அவர் ஒரு பாரசீகக் கவிஞர்: சிறந்த அனுபவித்த தத்துவங்களை, வாழ்க்கையிலிருந்து வடித்தெடுத்து, நூதனப் பாடல்களில் அமைத்திருக்கிறார்: அவருடைய கவிதையில் நாம் கண்டு களிப்பது, இதய மர்மங்களும், புதிய தத்துவங்களும், வாழ்க்கையின் வில்லங்கமும் விசித்திரங்களுமே யாகும். விதியின் வில்லங்கச் சங்கிலியை, கடவுளாலும் முறித்தெறிய முடியவில்லையே என்றும், கடவுளும் மனிதனைப் போலவே மதி

மயங்கி உழல்வதாகவும், உமர்கயாம் பரிதாபப் படுகிறார்!

விதியே, உமருக்குக் கடவுள்!

3

ரோஜா மலர்கள், திராட்சை ரஸம், மது வழிந்தோடும் கிண்ணி, அதை ஊற்றும் ஜீவனுள்ள பெண், உயிர்க்கவிதை — இவைகளே, இந்த உலகத்தை ஒரு நிகரற்ற சொர்க்கமாக மாற்றிவிடுகின்றன! இதுவே உமரின் உன்னத அபிப்பிராயம்.

4

உமரின் பாடல்களை, ஆங்கிலத்தில் அழகாக ஆவேசத்துடன் மொழி பெயர்த்தவர்-எட்வர்ட் பிட்ஜெரால்ட் (1809-1883) இரண்டு மொழி பெயர்ப்புகள் செய்தார். முதலாவது மொழி பெயர்ப்பு—75 பாடல்கள்; இரண்டாவது மொழிபெயர்ப்பு 110 பாடல்கள்.

A. முதலாவது மொழிபெயர்ப்பைத் தழுவி, கவிமணி உயர்திரு. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் தமிழாக்கியிருக்கிறார்கள்; இரண்டாவது மொழிபெயர்ப்பைத் தழுவி, ஸ்ரீ ச. து. சுப்பிரமணிய யோகியார் தமிழில் தந்திருக்கிறார்கள்.

B. எட்வர்ட் பிட்ஜெரால்ட் (Edward-Fitzgerald) உமர்கயாம் பாடல்களை அட்படியே மொழிபெயர்க்கவில்லை; மூலத்தில் ஊறிக்கிடக்

கும் தத்துவத் தேனைத் திரட்டி, ஆங்கிலத்தில் சொற்செட்டுடன் பாடல்களில் அமைத்திருக்கிறார். பிட்ஜெரால்ட் கவிதா சிற்பி; ஸ்ரீ யோகியார் அவரை ஆழமாகப் பின்பற்றி ஆங்கில மெருகுடன், அருமையான தமிழ்ப் பாடல்களை ஆவேசத்துடன் பாடியிருக்கிறார். இதுவே மின்னற் கவிதை: ஒரு கவியின் உள்ளத்தில் உணர்ச்சிப் புயல் குமுறும்போது, மின்னற் கவிதை பறந்து சிறகடித்து வருகிறது; இயற்கையிலும் வாழ்க்கையிலும் தோன்றி மின்னி மறையும் நவநவ ரூபங்கள், ஒரு கவிஞனின் கற்பனைக் கண்ணில் படும்போது, அகக்கண்ணின் தீபமாகச் சொல்லோவியம் பிறக்கின்றது. காதலும் சோகமும், தேனும் நிலவும், கண்ணீரும் சிரிப்பும், இன்பமும் துன்பமும், அழகும் சுடலையும், அலையும் மலையும், உடலும் கடலும், ஒன்றையொன்று கவ்விப் புரண்டு, இன்பத்தின் இதயத்தில் துன்பத்தையும், துன்பத்தின் தலையில் இன்ப விடுதலையையும் நாம் கண்டு கண்டு வியப்புறுகின்றோம்.

உமர் உயர்ந்த கவிஞர், நாவுக்கரசு; பிட்ஜெரால்ட் மொழி மன்னன்; ஸ்ரீ யோகியார், கவிதையுலகில், நவீன தந்தச் சிற்பி; அவர் ஆஸ்கார் ஒயில்டைப் போல ஆனந்தமாக மொழியாட்சி செய்கிறார்.

5

A. முதலாவது மொழி பெயர்ப்பைத் தழுவி நிற்கின்ற 'தேவி'யின் பாடல்: ஒரு பாட்டைப் பார்போம்:—

"The moving Finger writes; and having writ;
Moves on; nor all thy Piety nor wit
Shall lure it back to cancel half a line
Nor all thy Tears wash out a word of it"-E.F.

"எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு
வார்த்தை யொன்றை மாற்றிடுமோ
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ" (தேவி)

B இரண்டாவது மொழி பெயர்ப்பைத் தழுவி நிற்கின்ற யோகியாரின் பாடல்:—

"எழுதும் விதி விரல்தான்
எழுதிக் கொண்டே நகரும்;
தொழுதும், துதிசெய்தும்,
சூழல் அறிவின் சூழ்ச்சியிலும்,
எழுதுவதில் பாதி வரி
என்றாலும் கலையாதே!
அழுதாலும் கண்ணீரால்
அரைவார்த்தை அழியாதே!"

—(யோகியார்)

6

C. உமரின் தொடர்ந்த கருத்துக்களைப் பிழையின்றி ஆராய்ச்சியுடன், வரி விடாமல் 402 - பக்கங்களில் ஆங்கிலத்தில் சமீபத்தில் 1941-ல் மொழி பெயர்த்துத் தந்தவர் ஸ்ரீ சுவாமி

கோவிந்த தீர்த்தா அவர்கள். பாரசீக மொழியில் ஆழ்ந்த புலமை பெற்று, மிக எளிய நடையில் ஆங்கிலத்தில் தந்திருக்கிறார்கள்; ஆனால் பிட்ஜெரால்ட் மொழி பெயர்ப்பு, மொழியின்ப மெருகு பெற்றது; சுவாமிகளின் ஆங்கிலத்தில், கவிதா சிற்பியின் சித்திர நடையைக் காணமுடியாது; தத்துவ நடைதான் அது, உண்மைக் கவிஞனின் ஓவிய நடையல்ல.

7

தேவியின் நடையில், ஒரு பழுத்த கனிந்த உள்ளம் ஆனந்தமாக அமைதியுடன் உலவுகிறது; யோகியாரின் நடையில், இளமையின் ஜிலுஜிலுப்பு விறுவிறுப்புடன் சுழல்கிறது; ஆனால் இரண்டு கவிஞர்களும், கவிதா சிருஷ்டியில் மனோபாவத்தைத் தழுவி, ஓங்கிய கற்பனைக் கொடியுடன் தமிழ் மொழியின் எழில் நிறைந்த, தொடர்ந்த வெற்றியை எடுத்து விளக்கும் அகண்ட ஆற்றல் பெற்றவர்கள்தான்! இதில் எவ்வித சந்தேகமுமில்லை.

15-4-1945. **வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.**

உமர்கயாம் அருளிய

ருபயாத்

கவ்வும் இருள் காவினின்றும்
கண் சிமிட்டும் தாரகைகள்
செவ்வி சிதறவிட்ட
செங்கதிரோன் வானத்தில்
கூடும் இரவினையும்
கூடத் துரத்தி சுல்தான்
மாடத்தை மின் வாளால்
மாட்டினான்! விழித்தெழுநீ!

2

மங்கி இருள் புலரும்
மசக்காலை கழிவதன் முன்
பொங்கு மது மாடத்துப்
புதுக் குரலின் கனுக் கேட்டேன் :
வாய்ந்த மதுக் கோயிலுள்ளே
வகுத்திருக்கப் பாழ் வெளியில்
ஒய்ந்து தலை கவிழ்ந்தே
உறங்குவ போல் த்யானம் என்னே?

3

கோழிதான் கூவிடவும்,
குல்வி மது மண்டப முன்
வாழி இருந்தவர்கள்,
'வாயில் திறவும்' என்றுர்.
எவ்வளவு சின்னேரம்
இருப்பதென நீர் அறிவீர்;
இவ்வளவே, போனேமேல்
இனித் திரும்பல் நிச்சயமோ?

4

புத்தாண்டு பழங் காதல்
புதுக் காதல் ஆக்கியதே;
சித்தான மதிக் கலேஞன்
சேர்ந்தே தனியிடத்தில்,
மூசாவின் வெண் கை[1]
முடைப் புதரை மூடுவதும்,
ஏசு உடலொடும் வான்
எழும்புவதும்[2] பயின்றிடுவான்.

5

இன்ப ரோஜா மலர்களுடன்
இராம்[3] ஒழிந்து போனுன் காண்!
அன்பு ஜம்ஷெட்[4] எழு வளேய
அருங் கோப்பை[5] யார் கண்டார்!
என்றுலும், திராட்சை
இளங் கொடியில் செம்மணிதான்

எண்களால் குறிப்பிட்ட விஷயங்களுக்கு அநுபந்தம் காண்க

குன்றுது நீர்க் கரையில்
　　குளிர் காவின் வீச்சு கண்டாய்.

6

தாவூதின்[6] வாயடைத்து,
　　ஆனாலும் தனிச் சுவையாய்
மேவும் இராப் பறவை
　　விரி ரோஜாப் பூவினிடம்,
'கள்ளே, நற் கள்ளே, நற்
　　கள்ளே, சிவந்த கள்ளே,
கள்ளே!' எனக் கன்னம்
　　கனிவூரக் கூவிடுமால்.

7

வாடீ, என் கிண்ணம்
　　வழிய மது வார்த்திடுவாய்!
நீடொளியின் வான் வசந்த
　　நெருப்பிசையில் உன் கவலை
கடுக்கும் குளிருடையைக்
　　கழற்றியெறி! காலப் புள்
விடுக்கும் ஒரு கணத்துள்ளே
　　வியன் சிறகும் விரித்ததுவே.

8

நைசாப்பூர்[7] என்றுலென்?
　　நற் பாபிலோன்[8] எனிலென்?
உய்கோப்பை உவட்டிடிலென்?
　　உவட்டாமல் இனித்தாலென்?

வாழ்க்கை மது துளித் துளியாய்
வடிந்து கழிவது காண்;
வாழ்க்கை இலை ஒவ்வொன்ருய்
வீழ்ந்து மடிவது காண்!

9

அதிகாலை ஒவ்வொன்றும்
ஆயிரமாப் பூக் கொணரும்
இது காண் நெறி என்ருய் :
நேற்றை மலர் எங்கு, சொலாய்?
மலர் கொணரும் முதல் மாத
வசந்தமே மன்னு புகழ்
குலவு ஜம்ஷெட், கைக்பாட்டைக்[9]
கொண்டுசெலக் காணுயோ?

10

நன்றே கொண்டு செல்க
நமக்காக வேண்டியதென்?
பொன்ருப் பெருங் கைக்பாடால்
புகழ் கொசுரால்[10] ஆவதென்ன?
ரூஸ்தமுடன்[11] ஸாலும்[12]
ருத்ரநடம் புரியட்டும்,
ஆஸ்தி ஹதீம்[13] விருந்தழைப்பும்,
யாருக்கு இவை வேண்டும்?

11

வயலுக்கும் பாலை
வனத்திற்கும் இடையினிலே

இயன்றிருக்கும் பூங்காவின்
இனிமைக்கு என்னுடன் வாடீ!
அரசன் அடிமை என்ற
நினைவெல்லாம் அங்கில்லை;
பரசு மாமூத்[14] பொன்பீடப்
படர் சாந்தம் ஆக்கிடு நீ!

12

மாதவிப் பூங்கொடி நிழலில்
மணிக் கவிதை நூலொன்றும்,
தீதறு செந் தேன் மதுவும்,
தீங்கனியும் - பக்கத்தில்
காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல்-
ஏதும் இனிக் கவலை யில்லை;
இதுவன்றோ பரமபதம்!

13

பேருலகில் புகழ் தேடிப்
பிணங்குகின்றார் சிற்சிலரே;
சீர்தேவர் தூதரின் வான்
சிறப்பை எதிர் பார்ப்பர் சிலர்;
இருப்பதனை விட்டு விட்டுப்
பறப்பதனுக்கு ஏமாறேல்!
பொறுப்பற்று எங்கோ புதைந்த
சாப்பறையும் கேளேல் நீ!

14

சுற்றி நடம் புரியும்
சுடர் ரோஜா கூறுதல் காண்:

குற்றமிலாச் சிரிப்பொடு இக்
குவலயத்தே பிறந்தேன்; என்
பட்டிதழின் மூடு மொட்டுப்
பெட்டி திறந்து உள்ளவெலாம்
கொட்டினேன் மணம் வீசக்
குளிர்காவில் முழுவதுமே.'

15

பொன்னை விளைத்துப்
புதைப்போரும், மழைத்துளி போல்
பொன்னைப் பெருங் காற்றில்
பறக்கவிட்டுப் போவோரும்,
என்ன பயன் கண்டார்?
இறந்தார் பின் மண் புதைந்தார்;
பொன்னேனும் பேர்த் தெடுப்பர்
பொன் புகழும் பெற்றிலரே.

16

காணும் கன வெல்லாம்
கரியாகப் போகு மன்றிப்
பேணிப் பெருமை தரும்
பெருங் கனவும் எல்லாமும்
பாலை வனுந்தரத்துப்
பனி ஒளிபோல் சின்னேரம்
கோலம் விளக்கிப் பின்
குமைவது காண் - காணுமே!

17

காரிரவும் பகலும்
கதவாகக் கொண்டு வளர்

பாரகமாம் சத்திரத்துப்
படரும் புழுதியிலே,
சுல்தான் பின் சுல்தானுய்த்
தோன்றிச் சிலகாலம்
இத் தாரணி ஆண்டார்,
இறந்தார் தம் - வழிச் சென்ருர்.

18

ஆழ் குடியால் பெரும் புகழால்
ஆர்ந்த ஜம்ஷெட் நீதிசபை[4]
பாழ்வெளியாய்ச் சிங்கமொடு
பல்லிகளும் பற்றினவாம்;
கல்லிக் கடுங் கழுதை
காலுதை தன் தலை தைத்தும்
வில்லின் திறல் வேடன்
பஹ்ரம்[15] இன்னும் விழித்திலனுல்.

19

மண்ணிடத்து மக்கியதோர்
மன்னர் பிரான் ஸீஸர்[16] உடல்
புண்ணிடத்துச் செங் குருதி
பூப்பதுவோ ரோஜாவாய்,
கவின் முகத்துக் காரிகையார்
கண் அமுதம் கானகத்தில்
குவிந்ததுவோ கருங் குவளைக்
குவியலாய் என நினைப்பேன்.

20

கவ்வு மதுக் கானுற்றின்
கரையோரம் கவிந்து வளர்
செவ்வி தரும் பேரின்பத்
திராட்சை இளங் கொடிதான்
வவ்விய பேர் எழிற் கொவ்வை
வாய்ச்சியர் தம் வாயமுதச்
செவ்விதனில் வளர்ந்ததுவோ?
சிதையேல், நீ சிதையேலே!

21

நீடிய தோர் பழங் கவலே
வரு பயங்கள் நினே வழிய
வாடீ, என் கண்மணியே!
வழிய மது வார்த்திடுவாய்!
நாளேயோ? — நாளே எனில்,
நாளேயில் நான் நேற்றுேடு சேர்
வேளே யொடு ஏழாயிரமாம்
வீணுண்டோடு உறைவ னன்றோ?

22

மிக்க பேர் எழிலுடையார்
விரி நேசர் யாவருமே
தொக்க பெருங் காலன்
சூட்சி அறுவடையில்
கள்ளுண்டு ஓரிரு முறைகள்
களித்திருந்தார்; பின்னர் மண்ணில்

உள்ளுண்ட மரணம் எனும்
உறக்கத்தே ஓய்ந்தனர் காண்.

23

செத்திறந்தார் அன்னாரின்
சிற்றறையில் யாம் மகிழ்வோம்;
புத்துடையினால் வசந்தப்
புனை காலப் புகழ்ச்சியிலே
பூமியின் கீழ்ப் படுக்கை
புகுவோமேல், யார்க்காகப்
பூமியின் கீழ்ப் படுக்கை
புனைவதற்கோ? யார் அறிவார்?

24

மண்ணோடு மண்ணாகி,
மண்ணடியில் மக்கிப்போய்,
பண் இசையும், பாடகனும்,
பனி மதுவும், எல்லாமும்
முடிந்து விடும்; நாமும்
முடியுமுன்னே உள்ளதெல்லாம்
கடிதிலே செலவு செய்து
களித்திடுவோம் வாராய் நீ!

25

இற்றை நாள் இன்பத்திற்கு
இயைவதனை வகுப்போர்க்கும்,
மற்றை நாள் சுகம் என்றோ
வருமென்று காப்போர்க்கும்,

காரிருட்டுக் கோபுரத்தின்
காவலோன் கூறுதல் காண்:
'பேரிருளீர்! இங்கு மில்லை,
அங்கு மில்லை பெரும் பேறே!'

26

இம்மையிலும் அம்மையிலும்
இயைவதனை இசைத்திடுவார்
செம்மையராம் முனிவ ரெலாம்
சிறு தேவத் தூதரைப் போல்
தள்ளுண்டார் இழிவுக்கே;
தகையுண்டது அவர் வார்த்தை;
உள்ளுண்ட மண்ணகத்தே
வாய் புதைந்தார், ஓய்ந்திட்டார்.

27

சிறு வயதில் ஆர்வமொடு
தேர்ந்த பல ஞானியராம்
அறிஞரிடம் 'அஃது' 'இஃது' என்று
அலை வாதம் பல கேட்டேன்;
அறிவதற்காய்ச் சென்ற
அவ்வாயில் வழியே தான்
வெறுமையனாய்த் திரும்ப
வெளி வந்தேன் வேறில்லை.

28

அன்னாருடன் கூடி
அறிவு வித்தை விதைத்திட்டேன்;

என்னுடைய சொந்த
எழிற் கரத்தால் அதை வளர்த்தேன்;
திண்ணமாம் அறுவடையில்
சிக்கியது இவ்வளவே காண்
‘தண்ணீர் போல் தோன்றித்
தனிக் காற்றுய்ச் செல்வம்’ என்றே!

29

எங்கிருந்தோம், ஏன் பிறந்தோம்
என்றறியாது இவ்வுலகில்
பொங்கியதோர் நீர்ப் பாய்ச்சல்
புதுமையினில் புகுந்தோம் நாம்!
எங்கு செல்வோம் என்றறியாது
ஏகவெளிச் சூறையென
மங்கிடுவோம், இவ்வுலக
வாயில் விட்டுப் போவோமால்!

30

நான் கேளாது இப்புவியில்
நண்ணியது எவ் இடத்தினின்றே?
நான் கேளாது இதை விட்டு
நண்ணுவது எவ் இடத்திற்கோ?
சிந்தையில் இவ் அடாத் தன்மை
செறி கேள்வி நினைவெல்லாம்
மொந்தை மொந்தையாக் கள்ளே
முழுக்கடிக்க வேண்டுமடீ!

31

வாழுலக மையத்தின்
ஏழாம் கதவூடே

சூழ் ஒளியில் பாய்ந்தேன்,
சுடரும் சனிக் கோளப்
பீடத்து அமர்ந்தேன்,
பல சிக்கல் பிரித் தறிந்தேன்;
தேடும் மனித விதிச்
சிக்கல் மட்டும் தெளியவில்லை

32

கரைக்குப் பின் கதவுக்குக்
காணேமே சாவி ஒன்றும்;
திரைக்குப் பின் ஏதேதோ
தெரியவில்லை, பார்த்ததில்லை;
யான் என்றும் நீ என்றும்
யாதோ உரைப்போம் - பின்
யானுமில்லை, நீயுமில்லை,
யாதுமில்லை காணுயே!

33

காசினிக்கும் எட்டாது;
கருநீலம் பாய்ந்து, கத்தி
வீசும் கடலுக்கும்
விளங்காத ரகசியம் காண்:
கங்குல் பின் காலையெலாம்
மறைத்துப் பின் காட்டுகின்ற
பொங்கு குறிச் சுடர்வானும்
அறியாத போதமன்ருே!

34

என்னுள்ளே திரைக்குப்பின்
இருக்கின்ற பெருமானே!

துன்னிய கார் இருள் நடு ஓர்
சுடர் பிடிக்க வேண்டி யல்லோ
என் இரண்டு கையெடுத்தேன் :
எங்கோ ஓர் ஒலி கேட்டேன் :
'உன்னிடத்தே நான் குருடன் -
உணர்ந்தனையோ ?' என்றதுவே

35

அன்றே இக் களிமண்ணால்
ஆக்கு கிண்ணி விளிம்போரம்
நன்றே சாய்ந்து என் உயிரின்
நலம் வேண்டித் தொழுதிட்டேன் :
முத்தாடி முத்தாடி
முணுமுணுத்தே உரைத்ததது :
'செத்தார் பிறப்பதில்லை
செம்மது உண்' என்பதுவே.

36

நடுங்குங் குரலினிலே
நல்லிசையில் தேன் கோப்பை,
'ஒடுங்கும் உயிர் ஓர் முறைதான் ;
ஊறும் கள் உண்' எனவே
செப்பினதாய் நினைத்தேன் ;
செவ்விதழில் முத்தங்கள்
எப்படியோ, எவ்வளவோ,
ஏற்றதுவும் கொடுத்ததுவும் !

37

ஏனெனில் என் நினைவினிலே
யான் ஒரு நாள் வீதிவழிப்

போனதுவும், ஓர் குயவன்
புதுக்கோப்பை புனைவதுவும்,
அஞ்சி அந்தக் கோப்பை
அழிந்தோடும் குரலினிலே,
'மிஞ்ச மெல்ல மெல்ல' எனக்
கெஞ்சுவதும் தோன்றுதல் காண்.

38

பண்டை முதல் இன்றுவரை,
பல பலவாம் தலைமுறைகள்
கண்டது இதைப் போல் ஓர்
கதையன்றோ? பெருங் கடவுள்
குழைத்த களி மண்ணுலே
குழந்தைகளாய்ப் பல உருவாய்
பிழைக்க விட்டான் என்னும் ஒரு
பெருங் கதைதான் காணுயோ?

39

பூமியிலே சொட்டுகின்ற
புதுத் தேன் துளி பலவும்
பூமி உணும் என்று சொலல்
பொருந்தாது; பூமியின் கீழ்
ஆழத்தில் பல காலம்
அடங்கிப் புதைந்த விழிக்
கோளத்தின் சினம் அகற்றி,
குலவும் இன்பம் கொடுக்குமன்றே.

40

செந்தாமரைச் சேற்றின்
சேர்க்கை விட்டு மேலெழும்பி

நந்தாது சூரியனின்
நல்லொளியாம் கள் உணல் போல்
வான வெள்ளம் வைய வெள்ளம்
மாறிக் கவிழ்க்கும் வரை
தேன்அமுதம் தேக் கெறிந்து
தெவிட்டாது வாழ்ந்திடு நீ.

41

தெய்வீக மனுஷீகச்
சிக்கலினில் சிக்காதே!
பெய்நாளைப் பிணக்கெல்லாம்
பெருங் காற்றில் சூறைவிட்டு
ஏந்து மணித் திராட்சை
இளங்கொடித் தேன் பசுந்தளிரின்
கூந்தலினை மெல் விரலால்
கோமளமாய் வருடுவை நீ.

42

தெள்ளு மதுக் கள்ளும,
முத்தமிடும் தேன் இதழும்,
துள்ளு மற்றைப் பொருள் போலத்
தோன்றிப் பின் அழிவதெனில்,
நேற்றுவரை இருந்தபடி
இன்றிருக்கும் நீர்மையினல்
ஊற்று மதுப் போதையிலே
ஒரு நாளும் குறையோமே.

43

ஆதலினல் ஆற்ருேரம்
ஆரிருள் கள் தேவதைதான்

மோதும் இன்ப மதுக் கிண்ணி
 மோகனத்துக்கு அழைப்பானேல்,
உயிரே நாக்காக
 ஒரு கணத்தே உறிஞ்சிடுவாய்!
அயரேல், கடைநாள்தான்
 ஆயினும் என்? அயரேலே!

44

ஜீவன் இந்த மண் உடையின்
 சிறுமை விட்டு வானகத்துக்
காவினிலே நிர்மலமாய்க்
 காற்றின் மேல் பாயாமல்
குட்டக் களி மண்ணும்
 குடிசை யுடலில் குறுகி
வெட்டியாய் வாழ்வதெனல்
 வெட்க மன்ருே? வெட்க மன்ருே?

45

கூற்றுவனூர்க்கு ஏகும் வழி,
 சுமையும் உயிர் ஓர் பகலில்
ஆற்றியிருந்து இளைப்பாற
 அமைந்தது உடல் கூடாரம்:
ஜீவன் கிளம்பிடவும்
 செங்காலன் சாடிடுவான்,
மேவு மற்ருேர் விருந்தினுக்கே
 கூடாரம் விரித்திடுவான்.

46

நம் கணக்கைத் தீர்த்து
 நமை மடித்த பின், வாழ்க்கை

நம் போலக் காணுது
என நினையேல் : நம் போன்றே
அழியாத தேன் வார்ப்போன்
ஆருயிர் வள்ளத்தி லின்றும்
பொழிந்துள்ளான் பல குமிழி
பொழிந்திடுவான் இனி மேலும்.

47

திரைக்குப் பின் நாம் மறைந்து
சென்ற பின்னும் இவ்வுலகம்
கரையற்று நீண்ட பெருங்
காலம் வரை வாழ்ந்திடுமாம்:
கத்துகின்ற கடல், ஒதுக்கும்
கல்லைப் பின் கருதிடுமோ?
இத்தரை, நாம் வந்ததும்
போனதுவும் இசைத்திடுமோ ?

48

ஒன்றுமே இல்லாத
ஓர் கணமே வனுந்தரத்தின்
நின்ற குளத்தூறும்
நிறை வாழ்வுச் சுவை உண்போம்.
மாயமாம் வாணிபர்கள்
வந்துவிட்டார்; புறப்பட்ட
தூய நிர் நில வெளிக்கே
துரிதத்தில் தொடர்வாயோ?

49

வாழ்க்கை எனும் சிக்கல்
வளரும் ரகசியங்கள்

நீக்கவோ முயல்கின்ருய்?
நேசனே! சீக்கிரம் காண்,
'மயிரிழையே' உண்மைக்கும்
பொய்மைக்கும் வரம்பெனலாம்;
உயிர் எதனைச் சார்ந்திங்கு
உறைவது, நீ அறிவாயோ?

50

மயிரிழையே உண்மைக்கும்
பொய்மைக்கும் வரம்பெனலாம்;
உயிர் அறிய 'அலீப்' 16 என்னும்
ஒரெழுத்தே போதுவதாம்;
உன்னாலே முடிவதுவோ?
உள்ளகத்தே பொக்கிஷமும்
தன்னேரில்லாத் தலைவன்
தன்னையும் நீ காண்குவையோ?

51

அவன் இன்ப ரகசியத்தேன்
அவனியுறு நரம்பிலெலாம்
கவின் ஊறிப் பாதரசக்
களிப் போடே பாய்ந்திடுமாம்:
புள்ளாய், விலங்காகிப்
புல் பூண்டாய் மாறிடினும்
உள்ளே இருக்கும் அந்த
உயிரோனே - மாருதோன்.

52

மருட்டும் இருள் சுருள் சுழல
வளையவரும் நாடகந்தான்,

தெருட்டும் ஒரு கணத்துள்ளே
சிந்தித்தான் : தானேதான்
நாடகமாய், நாடகத்தில்
நடிப்பவராய்ப் பார்ப்பவராய்
ஆடுவன் காண் பெருங் கடவுள்
அரும் போது போக்குதற்கே.

53

இடிப் பறியாப் பூமியின் கீழ்
எட்டி எட்டிப் பார்த்தாலும்,
வெடிப் பறியா வான் கதவை
வெறித்துற்று நோக்கிடினும்,
வீணே காண்; நீ நீயாய்
விளங்கும் இன்று வரையிலுமே;
காணுவதோ நாளை உனைக்
கழித்த பின்பு ரகசியங்கள்?

54

இதுவென்றும் அதுவென்றும்
எண்ணமிட்டுக் கலங்காதீர்!
எது பெரிதென்று எது சிறிதென்று
ஏதேதோ வாதமிடேல்!
கனி அமுதாம் திராட்சைக்
கனியூறும் செந்தேனின்
இனிமையினில் கசப்பெல்லாம்
கவலையெல்லாம் இழந்திடுவீர்.

55

இரண்டாம் கல்யாணம்
என் மனையில் யான் செய்யத்

திரண்ட எந்தன் மனத் திறனைச்
சிநேகிதர்காள், நீர் அறிவீர்!
வெட்டியாம் மலட்டறிவை
விலக்கிவிட்டுப் படுக்கையினில்
குட்டித் திராக்ஷமணிக்
கொடிமகளைக் கைப்பிடித்தேன்.

56

உள்ளதுவும் இல்லதுவும்,
உள்ளும் புறமும் எலாம்
தெள்ளத் தெளியத்
தெரிவிப்பேன் என்றாலும்
உள்ளத்தாலே ஒருவன்
உணரும் கலைகளிலே
கள்ளைப் போல் வேறொன்றில்
ஆழ்ந்தில்லேன், காணீரே!

57

தரும் எந்தன் கணிதத்தின்
செவ்வியதோர் தன்மையினால்
வருடங்கள் வரிசை யெலாம்
பிழையின்றி வரும் என்பார்;
சென்ற நாள் அவை கழித்துச்
சேரு நாள் அவை அழித்து
ஒன்றாக வகுக்கின்ற
வித்தையலால் ஒன்றுமில்லை.

58

மாலை போம் போதினிலே
மதுக் கடையின் வாயில் வழிச்

சில இருட் செறிவில்
ஒளி வீசும் தேவதைபோல்
தோளின் மேல் மது வள்ளம்
தூக்கிவந்து என்னிடம் நீட்டிக்
கோளாகக் 'குடி' என்ருன்
கோற்றேனே த்ராக்ஷை மணி!

59

சாதி எழுபத்திரண்டு
சண்டையிடும் சமய நெறி
வாத மெலாம் கணப் போதில்
மாய்த்துடைக்க வல்லது காண்;
சூதுற்ற காரியச்
சுழல் வாழ்வைத் துகளில்லாப்
போதப் பொன்னுக்கும் ரச
வாதமன்ரே திராட்சை ரசம்!

60

மூச்சினிலும் தேவன் அருள்.
மூண்ட திறல் மாமூதின்
வீச்சினிலே சுழல் காற்றின்
வீரவாள் முன்னிலையில்,
துக்கம், துயரம், அவ
நம்பிக்கை, தொடர் பவமாம்
மைக்கார் இருள் அசுரர்
மருண்டோடிப் போயினரால்.

61

தேவன் வளர்த்த மணித்
தேனூறும் திராட்சையினைப்

பாவமெனச் சொல்பவர் ஆர்?
பரமன் அருள் சுவை யன்ரு?
தீயதுவோ? இவ்வார்த்தை
தெய்வம் பொறுத்திடுமோ?
தீயதெனில், ஏன் வழியில்
தேவன் அதைத் திகழ வைத்தான்?

62

மண்ணிடத்து மாண்டு உடலம்
மக்கிய பின் தெய்வீகக்
கிண்ணிதனில் வான் மதுவின்
கிளர்ச்சி உண்போம் என நம்பி,
பின்னுள் பேரின்பம் எனும்
பேற்றிற்கு ஏமாந் திருந்து,
இந்நாள் என் உயிர்க்கமுதாம்
இன்பக் கள் இழந்திடவோ!

63

உண்மையில் வானுசைகளும்
உறு நரகப் பயங்களுமே
உண்மையிலே; ஒட்டமதாய்
ஒடுகின்ற வாழ்க்கை யொன்றே
உண்மை; ஈதல்லாமல்,
உண்மை எனல் யாவும் பொய்,
உண்மையினில் பூத்திடும் பூ
உறங்கி உதிர்வது காண்.

64

அப்பால், காரிருள் கதவுக்கு
அப்பாலே, கணக்கற்ருர்.

இப்போது வரை சென்றுர்
என்ருலும் ஆச்சரியம்:
ஒருவரேனும் திரும்பி
உரைத்ததில்லை; வீதிவழி
தெரியும்வகை நாமும் சாத்
தெருவூடே செல்வதுதான்.

65

சித்தர்களும் பக்தர்களும்
தேவ வாக்கு என்பதெலாம்
நித்திரையில் தோன்றியதோர்
நினைவல்லால் வேறில்லை;
இத்தகைய பொய்க் கதைகள்
எல்லாம் தோழருக்கு உரைதது,
செத்துவிழும் நித்திரையில்
சேர்ந்துவிட்டார், காணுயோ?

66

காணுத ரகசியத்தின்
காட்சியெலாம் கண்டுவரச்
சேணும் பெரு வெளியில்
திரியவிட்டேன் என் உயிரை;
மெள்ள மெள்ள என் உயிரும்
மீண்டெனக்கு விடையாக,
'வெள்ளியவான் நரகமெலாம்
நான் எனவே'! விளம்பிடுமால்.

67

ஆசை எலாம் பூர்த்தி
அடைவதுவே வாணுகும்;

வீசுங் கவலை அனல்
வேகும் உயிர் நிழல் நரகம்;
விட்டு வந்த காரிருளில்
மீண்டும் நாம் புகும்போது
பட்ட துயர் நரகும்
படர் வானும் காணுதாம்.

68

சூத்திரதாரியின் சூழ்ச்சி,
சூரியனின் ஒளி கொள்ளும்
பாத்திரமாம் சந்திரனின்
படர் நிலவில் நாமெல்லாம்
பொம்மலாட்டத்து ஆடும்
பொம்மைகளைப் போன்றல்லோ
சும்மா வருவதுவும்
போவதுவும் சூத்திரத்தால்!

69

படர் இரவும் பகலும்
சதுரங்கப் பலகையதாய்க்
கடவுள் விளையாடும்
கணக்கற்ற பொம்மைகள் நாம்;
அங்கும் இங்கும் நகர்வதும்,
அடைப்பதுவும், வெட்டுவதும்,
இங்ஙனமே பின் மறைப்பில்
இறந்துறங்கிப் போவோமே.

70

பந்தது தான் அல்லவென்றும்
ஆமென்றும் பகர்வதில்லை-

பந்து உதைப்போன் உதைத்தபடி
பாய்ந்துருள்வ தல்லாமல்;
உலகம் எனும் விளையாட்டுக்
காவிடையே உமை விட்டான்
அலகில்லா இவை யாவும்
அவன் அறிவான்!- அவன் அறிவான்!

71

எழுதும் விதி விரல்தான்
எழுதிக் கொண்டே நகரும்;
தொழுதும், துதி செய்தும்,
சூழல் அறிவின் சூழ்ச்சியிலும்,
எழுதுவதில் பாதி வரி
என்றாலும் கலையாதே!
அழுதாலும் கண்ணீரால்
அரை வார்த்தை அழியாதே!

72

வான் வெள்ளக் கவிழ்ப்பின் கீழ்
மாந்தர் எலாம் வீணாகக்
கூனிக் குறுகிப் போய்க்
குறுநடையாய்க் குமைகின்றார்;
வான் நோக்கிக் கைகுவித்து
வாழ்த்தாதீர்! உதவிக்காய்
வானும் நமைப் போன்றே
வகையின்றி உருளுதல்காண்.

73

ஆதியினில் களிமண்ணால்
ஆக்கியுளான் யாவையுமே;

ஆதியிலேயே ஊழி
அறுவடைக்காய் விதைத்துள்ளான்;
சிருட்டியினில் முதற் பகலே
சேர் ஊழிக் கடை நாளின்
தெருட்டும் விதி முடிவைத்
தீட்டியுள்ளான், காணுயோ?

74

நேற்றைத் தினம் இன்றென்
நெஞ்சூறும் வெறி வருக்கும்
ஆற்றலுறும் நாளைக்கு
அழிவு வெற்றி யாதுறினும்,
எங்கிருந்தோம், ஏன் பிறந்தோம்,
எங்கு செல்வோம், ஏன் என்னும்
சங்கை விளங்காமையினுல்
தண் அமுதக் கள் உண்போம்.

75

கதிரவனும் செல்லாத
கடைவெளியில் நின்று சுடர்க்
குதிரையின் மேல் ஏறி வரும்
குரு முதலா நவக்ரஹங்கள்
கதி வகுத்த முதற் பகலே
களிமண்ணுல் பிசைந்த உயிர்
பதியும் எந்தன் உடலகத்தே
பாய்ந்தது இந்த விதிர்விதிர்ப்பே.

76

சித்தம் அதில் திராட்சை மணித்
தேன் ஊறி நரம்பு எல்லாம்

தத்தி எந்தன் உயிர்மேவித்
தழுவுதல் காண்! துறவியர்கள்
கத்தி என்னைச் சபிக்கட்டும்,
புறத்தினிலே கதைக்கின்றார் -
இத்தனைக்கும் வான் சாவி
இருக்கலாம் என்னிடத்தே!

77

ஈதறிவேன் நிச்சயமாய் :
ஈசனொளி, அன்புக்காய்
மோதுவதோ? அன்றி எனை
முடிப்பதுவோ? யாதெனினும்,
உள்ளுகின்ற கோயிலுள்ளே
ஒளி முழுதும் இழப்பதினும்
கள்ளுக் கடையில் வெட்டும்
கதிர் ஒன்றே மேலன்றோ!

78

அறிவில்லா மண்ணுடலில்
அறிவெழுப்பி, அதனாலே
நெறியில்லா நெறியின்பம்
நேர்ந்திடில், நீ, 'அழியாத
தண்டனையாம் நரகத்தில்
தள்ளுவம்' என்றே கூறும்
கண்டனைக்கு ஏதேனும்
கருத்துளதோ! நீதி இதோ?

79

கட்டிக் களிமண் உடலைக்
கடனாகக் கொடுத்துப் பதில்

கெட்டிப் பொன் நெறி என்னைக்
கேட்பதுவும் சரியாமோ?
ஒப்புக் கொள்ளாக் கடனைக்
கொடுத்திடென ஒறுத்திடுதல்
ஒப்புவதோ வியாபாரம்
உதவியில்லா வறியனிடம்?

80

போகின்ற பாட்டையிலே
புழை பலவும் மதுக் குடமும்
தாகமுற வைத்து, என்னைத்
தடுத்து விதிச் சூழலினல்
வேகமாய்ப் பாவ வலை
வீசிப் பிடித்த பின்னர்,
பாவி யான் என நீயே
பழித்திடுதல் நெறியாமோ?

81

மாந்தரெலாம் கீழான
களிமண்ணல் வகுத்தனை நீ,
சாந்தத் துறக்கத்தும்
சர்ப்பத்தைப் புகுத்தினையே!
ஜீவர் முகம் காரடையச்
செய்யு பவம் நினதே; நின்
பாவம் மன்னித்தோம், எம்
பாவமதும் மன்னிப்பாய்!

82*

போகின்ற நாள் அந்திப்
போது என்னும் கூட்டின் கீழ்,

---

* பாட்டு 82 முதல் 90 முடிய 'குசநாமா' என்ற மகுடத்துடன் எழுதப் பெற்றவை.

வேகின்ற பசியோடு
விரதத்தால் மெலிந்த ரம்ஸான்
கடை நாள் கழியு முன்னே
தனியாகக் களி மண்ணும்
குடக் கூட்ட நடுவே நான்
குயவன் வீட்டிடை நின்றேன்.

83

வடிவத்தில் பலபலவாய்
வகுத்திருக்கும் மண் குடங்கள்
கடினத்துத் தரைமீதும்
சுவர் அருகும் கலந்திருக்கும்;
பேசியதில் சில குலவும்,
பேசுவதைக் கேட்டு, சில
யோசிக்கும் பான்மையினில்
ஒன்றும் உரையாதிருக்கும்.

84

'வம்புக்காய் அல்ல எனை
வகை வகையாய் மண்ணெடுத்து
அம்பு*விட்டு இழைத்து, அழகாய்,
அற்புதமாய் உருச் செய்தார்:
வெம்பு மண்ணில் திரும்பவுமே
மேனி உடை படுவதற்கோ
அம்புவியில் பிறந்தது நான்?'
என்று அங்கொன்று அரற்றுதல் காண்.

85

'கொட்டி இன்ப மதுக் குடித்த
குப்பியினை உடைப்பதற்கே

*அம்பு – நீர்

துட்டப் பயலுக்கும் எண்ணம்
தோன்றிடுமோ? தன் சொந்தத்
திருக் கரத்தால் வனைந்திடு மண்
செப்பினைப் பின் கோபத்தால்
நொருக்கி உடைக்கான் - இதுவே
நிச்சயம்!' என்று ஒன்று சொலும்.

86

அத்தனையாய் மற்றவை போல்
அழகமையப் பெற்றில்லாச்
சொத்தை மட்குடம் எழுந்தே
துரிதமுடன் கூறிடுமால்:
'கூனிக் குறுகும் எனைக்
கொக்காணி காட்டிடுவார்
மேனி வகுக்குங்கால்
விரல் அசைந்ததோ என்றே?'

87

ஆங்கொன்று உரைத்திடுமால்
அறிவாளன் சூபி[17] யைப் போல்:
பாங்கில் நெருப்பு நெஞ்சப்
பயனூறும் சிற்றடுப்பாம்:
'குயவன் என்றும் குடம் என்றும்
பற்பலவாய்க் குரைக்கின்றீர் -
குயவன் ஆர்? குடம் ஆர்? இக்
கொள்கை அறிவீரோ நீர்?'

88

'சுட்டபோது எம் உடலம்
துடிதுடிக்க நல் உருவைக்

கெட்டதாக்கிய அந்தக்
கிளர் தேவனே நரகக்
குட்டமதில் உமைத் தள்ளிக்
குமைப்பன் எனச் சிலர் சொல்வார்:
துட்டனன்று அவன், நல்லன்,
சுகம் அடைவீர்!' என்றது ஒன்றே.

89.

'படைத்ததார் எனே, வாங்கிப்
பயனடைவது ஆர் எனவே
மடத்தனங்கள் இனிப் பேசேன்:
வரண்டுளது என் அகம் எல்லாம்;
பழகிய தேன் மது வார்ப்பீர்—
பசுமையுறும் என் நெஞ்சம்,
அழகிய என் உயிர் மீளும்!'
என மற்றென்று அரற்றுதல் காண்.

90

ஒன்றைவிட்டு ஒன்று இவ்வாறு
ஊறும் இன்பக் கதை பேச,
நின்ற நெடு வானத்தில்
நிலவு எட்டிப் பார்த்திடுமால்:
ஒன்றோடு ஒன்று உற மோதி
உரைப்பது காண்: 'சோதரரே!
இன்று இப்போது இக் கூலி
தோள் முடிச்சில் ஏறுவமே!'

91

திராக்ஷை தரும் தேனில் எனேக்
கடைநாளில் தேற்றுவிப்பீர்;

திராக்ஷை தரும் தேனில் உடல்
குளிப்பாட்டிச் சேமிப்பீர்;
திராக்ஷை இலைச் செறிவினிலே
எனை மூடித் திகழவைப்பீர்;
திராக்ஷை வளர் தோட்டத்துச்
செம் மண்ணில் புதைத்திடுவீர்!

92

புதைத்திட்ட உடற் சாம்பல்
பொடி கூடத் திராக்ஷையாய்
உதைத்திட்டு மேலெழும்பி
ஊறு மணம் வீசிடுமால்;
பதைத்தவர்க்கு மதப் பயன்கள்
படிப்பிப்பார் போலன்றி,
இதத்தை எவர்க்கும் அறியாது
இறைப்ப தன்றோ த்ராக்ஷை மணி!

93

ஆசையுடன் யான் வளர்த்த
அழகு உருக்களால் என்னைப்
பேசுதற்கும் இழிவாகப்
பேருலகம் எண்ணியதால்,
கீர்த்தி எலாம் மது ஊறும்
கிண்ணத்தே முழுக்கடித்தேன்;
சீர்த்தி எலாம் கள் ஊறுஞ்
செய்யுளுக்காய் விற்றுவிட்டேன்.

94

'விட்டு விடுவோம் கள்ளே,
வேண்டாம்!' எனப் பலகால்

திட்டமிட்டேன் - எனினும் அப்போ
தெளிவோடு இருந்தேனே?
வட்டமிடும் இளவேனில்
ரோஜாவின் மலரோடு
எட்டினதும் திட்டம் எலாம்
இழிந்து சிதைந்து ஒழிந்தனவே.

95

கள்ளே என் புகழை, எல்லாம்
களவு கொண்டது என்றாலும்,
கள்ளேதான் 'காபிர்' என
மதத்துள்ளோர் கதைத்திடினும்,
கள்ளைப் போல் மதிப்பரிய
காசினியில் வேறில்லை;
வெள்ளிக் காசுக்காய்க் கள்
விற்பதுதான் ஆச்சரியம்!

96

இளவேனில் ரோஜாவின்
இதழோடும் குவிவதுவே!
இளமை எனும் மணம் வீசும்
ஏடுகள் தாம் மூடுதற்கே!
இளங்காவில் ராப் புள்ளின்
இன்னிசை எங்கு ஏகுவதோ!
வளங்கள் எலாம், ஐயையோ,
மாய்ந்து ஒழிந்து போவதற்கே!

97

அழியாத பேரூற்றின்
பாலைவனம் அரைக்கணமே

கழியாமல் சிதைந்தேனும்
காட்சியுறக் காட்டிவிடின்,
மிதியுண்ட செடி மீண்டும்
மீளுகின்ற தன்மை என,
சதியுண்ட தாகத்தால்
தவித்திடுவோன் உயிர்த்திடுவான்!

98

காலம் கடப்பதன் முன்,
காவலோன் விதிச் சுருளை
மேலும் விரிக்காமல்
விட்டுவிட்டால், அல்ல எனில்,
எழுதியவை அழித்துப் பின்
எழுதிடினும், அல்ல எனில்,
முழுதும் துடைத்து எல்லாம்
முடித்திடினும் நலமன்றே!

99

காதலியே! ஈசனுடன்
கலந்தோமேல், இப்படைப்பில்
மோது துன்பக் கோளம் எலாம்
முழுவதும் கைவசப்படுத்திப்
பொட்டெனவே போட்டுடைத்து,
புதுமையுற நெஞ்சகத்துக்கு
எட்டும் வகை இன்பத்தால்
இழைத்துப் படைப்போமே!

100

எமைத் தேடிப் பின்னும்
எழுகின்ற வெண்ணிலவே!

எமைத் தேடி எத்தனை நாள்
குறைந்து நிறைந்து இயங்குவையோ?
எவ்வளவு முறை யாங்கள்
இறந்த பின்னும், இவ்வனத்தைக்
கவ்வி எமைத் தேடுவையோ,
கதிர் நிலவே, யார் கண்டார்?

101

தாரகை சேர் காவனத்துச்
சந்திரனைப் போல் நீயும்
சேரும் இந்தப் பூங்காவின்
செவ்வி எலாம் பார்த்துவரின்,
விருந்தினர்க்காய் வான் மதுவின்
வெள்ளம் வடிப்போய், நான்
இருந்த இடத்து ஒரு சொட்டே
இன்பத் தேன் கிண்ணி கவிழ்!

தமாம் ஷுத்



அநுபந்தம்

1. **மூசா** - மூசா நபி. மனு ஸ்மிருதி செய்தது போல் யூதர்களுக்குச் சட்டம் அமைத்துக் கொடுத்த ஞானி. இவர் பத்துக் கற்பனை களைக் கல்லில் எழுதிவைத்திருந்தார். பின்னுல் ஆபிரஹாம் என்பவர் அந்தக் கல்லைத் தேடி எடுக்கச் சென்ற பொழுது, ஒரு மலை யில் ஒரு புதர் தீப்பட்டு எரிவதையும், அதன் நடுவே மூசாவின் கை தெரிவதையும் கண்டு அவற்றின் மூலம் கற்பனைகள் பொறித்த கல்லைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படு கிறது.

2. **ஏசு** - கிறிஸ்துநாதார். சிலுவையில் மரித்த பின், மூன்ரும் நாள் கல்லறையிலிருந்து அவர் மீண்டும் உயிர்த்து எழும்பியதாக விவிலிய வேதம் கூறும்.

3. **இராம்** - ஒரு பாரசீக மன்னன். பர்தூஸி என்ற பாரசீகக் கவி இவனைப்பற்றிப் பாடி யிருக்கிருர்.

4-5. **ஜம்ஷெட்** - ஒரு பாரசீக மன்னன். இவ னுடைய நீதி சபை புகழ்பெற்றது. இவ னிடம், அக்ஷயபாத்திரம்போல், திராட்ச ரசம் வற்ருத ஓர் எழு வளைய கோப்பை இருந்ததாகவும், அதில் உற்று நோக்கினுல்

முக்காலத்து விஷயங்களும் புலனுகும், என்றும் கதை உண்டு.

6. **தாவூது** - ஓர் இஸ்ரவேல் அரசன். விவிலியத்தில் இவன் வரலாறு காணப்படும்.

7. **நைஸாப்பூர்** - புகழ்பெற்ற பாரசீக நகரம். 'ருபயாத்' பாடிய உமர் கயாம் அவர்களின் சொந்த ஊர் இது.

8. **பாபிலோன்** - பண்டைப் புகழ்பெற்ற நகரங்களுள் ஒன்று. யூப்ரடீஸ் நதிக்கரையில் உள்ளது.

9. **கைக்பாட்** - ஒரு பாரசீக மன்னன்.

10. **கொசுர்** - கைக்கோ கொஷ்ரு என்று சொல்லப்படும் மற்ருெரு மன்னன்.

11. **ருஸ்தும்** - பலம் பொருந்திய ஒரு பழைய வீரன்.

12. **ஸால்** - இஸ்ரவேல் நாட்டு மன்னன்.

13. **ஹதீம்** - ஹதீம் டாய் என்றும் அழைக்கப்படுவான். பெரிய தீர்க்கதரிசி. அரசனுயிருந்து துறவு பூண்டவன். இதனுல் 'ஆண்டி-அரசன்' என்றும் பெயர் ஏற்பட்டது.

14. **மாமூத்** - இஸ்லாம் மதஸ்தாபகரான நபிகள் நாயகம்.

15. **பஃரம்** - புராணக் கதையில் நக்ஷத்திரமாக வர்ணிக்கப்படும் ஒரு வேடன்.

16. **ஸீஸர்** - ரோமாபுரியின் சாம்ராட்டுகளுக் குரிய பட்டப் பெயர்.

17. **சூபி** - தீர்க்கதரிசியும் தத்துவ ஞானியுமான ஒரு மகான்.

வங்கக் கவிஞர்

ரவீந்திரநாத் தாகூரின்

கீதாஞ்சலி

தமிழாக்கம் :

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

ஆங்கிலம், ஸ்வீடிஷ், டேனிஷ், ஜெர்மன், பிரெஞ்சு, டச், இத்தாலியன், ரஷியன், ஜெக், ஸ்பானிஷ், ஜிட்டிஷ், ஹீப்ரு, கிரீக், போர்ச்சுகீஸ், எஸ்டோனியன், ஹங்கேரியன், முதலிய மொழிகளில், தாகூரின் கவிதைப் பொக்கிஷங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தமிழனும் 'கீதாஞ்சலி' அமிர்தத்தை அருந்த வேண்டுமென்ற நோக்கத்துடன், மிக மிக நுட்பமாக மூலத்தின் சுவை மங்காது, திரு. வி. ஆர். எம். செட்டியார், ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவி, தமிழாக்கித் தந்திருக்கிறார்.

மே மாதம் மூன்றாவது வாரத்தில் வெளிவரும்!

விலை ரூ 2—8—0

....

முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு, தபால் செலவின்றி புத்தகம் அனுப்பப்படும். மிகக் குறைந்த பிரதிகளே அச்சிடுவதால், பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுவது நலம்.

எங்கள் அரிய இனிய இலக்கிய வெளியீடுகள்

1.	கிளிக்காதல்—பண்டித ரத்நம்	ரூ. 0	8	0
2.	சிறை அனுபவம்—ஆஸ்கார் ஒயில்ட்	1	4	0
3.	சிறந்த சிறு கதைகள் — ,,	1	4	0
4.	ஒற்றையங்க நாடகங்கள் — கே. ஸ்ரீநிவாஸ் பி. ஏ.	0	12	0
5.	தாகூரின் கவிதைக்கனி—மணிவாசகம்	0	12	0
6.	கவிதை, கலை, விமர்சனம் — சுப. நாராயணன்	2	0	0
7.	'கல்வி' முதலிய கட்டுரைகள் — வே. சாரநாதன் எம். ஏ.,	1	6	0
8.	'சலோம்' அல்லது குமரியின் சபதம்— நாடகம் — ஆஸ்கார் ஒயில்ட்	1	0	0
9.	'அசோகவனம்' — ஆ. முத்துசிவன் பி. ஏ. (Hons)	2	8	0
10.	'நட்சத்திரக் குழந்தை' முதலிய கதைகள் மூன்று ஆசிரியர்கள் கிளேஸ் பதிப்பு	1	4	0
	ஆண்டீக்பதிப்பு	1	8	0
11.	கட்டுரைக் கரும்பு — வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.,	2	0	0
12.	புராதன நாகரிகம்-அ. ராமய்யர் எம். ஏ.	1	4	0
13.	'இந்திரா' முதலிய நாடகங்கள் — கே. ஸ்ரீ. பி. ஏ.	2	0	0
14.	'மல்லிகை' முதலிய வங்க நாடோடிப் பாட்டுக் கதைகள் பி. கோதண்டராமன் எம். ஏ. பி. எல்.	2	8	0

இனி வெளிவரும் நூல்கள்

15. கவிஞன் ஷெல்லி எழுதிய 'செஞ்சி' நாடகம்
தமிழாக்கம்: வ. ரா.

16. "சோகப் பாலம்" முதலிய பாடல்கள் —
தமிழாக்கம்—திருலோகசீதாராமன்

17. தாகூரின் 'கீதாஞ்சலி'
தமிழாக்கம்: வி. ஆர். எம். செட்டியார் 2 8 0

"மல்லிகை"

மூன்று காதல் கதைகள் விலை ரூ. 2—8—0

(வங்கநாடோடிக் கதைகள்)

பி. கோதண்டராமன்
எம். ஏ, பி. எல்.

"இந்திரா"

ஆறு ஒற்றையங்க நாடகங்கள் 2—0—0

கே. ஸ்ரீ. பி. ஏ.

"மேரிமக்தலேனா"

பாடல்கள் 0—12—0

பாலபாரதி ச. து. சுப்பிரமணிய
யோகியார்

"குமரியின் சபதம்"

நாடகம் 1—0—0

ஆஸ்கார் ஒயில்ட்

ஸ்டாரர் பிரசுரம்

பாலக்கரை, திருச்சினுப்பள்ளி (H. O)

விரைவில் வெளிவரும்!

1. கவி ரவீந்திரநாத் தாகூரின்

"கீதாஞ்சலி"

தமிழாக்கம்:

வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.

விலை ரூ. 2/8

2. "தமிழ்க்குமரி" — பாடல்கள்

இரண்டாவது பதிப்பு

பாலபாரதி

ச. து. சுப்பிரமணிய யோகியார்

விலை ரூ. 2/8

3. "சம்யுக்தா" — நாடகம்

ஆசிரியர்: காஸ்டிரன்

தமிழாக்கம்:

கொடுமுடி ராஜகோபாலன் பி. ஏ.

STAR PUBLICATIONS

Palakarai Trichinopoly